சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சிகள் – உயர்மட்டக் குழுவின் அறிக்கை – கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல்.

---

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.6) துறை**

அரசாணை (நிலை) எண்.60 நாள்– 02.06.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039 – சர்வதாரி வைகாசி 20

படிக்கப்பட்டது–

அரசாணை (நிலை) எண்.168, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 10.08.1999.

படிக்க–

1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநரின் கடித எண். 3545/NC-III/2007, நாள் 5.10.2007.
2. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண். 7680/OPP 2/2007, நாள் 9.10.2007 மற்றும் 26.10.2007.
3. சமூக நல இயக்குநரின் கடித எண். 49185/நிர்.1(3)/2007, நாள் 10.10.2007 மற்றும் 16.10.2007.
4. அரசு செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை – 09, நேர்முக கடித எண். 30462/சி.1/2006, நாள் 9.11.2007.

------

**ஆணை**

ஊராட்சிகளுக்கு நிதி மற்றும் செயல்பாடுகளில் கூடுதல் அதிகாரப் பொறுப்புரிமைகள் வழங்குவது குறித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் தலைமையில் உருவாக்கப்பட்ட உயர்மட்டக்குழு 11.10.2007 கூடி விவாதித்தது. அன்று நடந்த கூட்டத்தில் ஊராட்சிகளுக்கு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை தொடர்புடைய திட்டங்களில் என்னென்ன அதிகாரப் பொறுப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்தும், வழங்கப்பட வேண்டியவை குறித்தும் ஆய்வு செய்து உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து ஊராட்சிகளுக்கு அதிகாரப் பொறுப்புரிமைகள் வழங்கப்பட வேண்டம் என்று அரசு ஆணையிடுகிறது:

(i) கிராம ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் மதிய சத்துணவு மையங்களின் செயல்பாடுகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றை கிராம ஊராட்சி தலைவர்கள் மேற்பார்வையிடப்பட வேண்டும். இது குறித்து அரசு ஏற்கெனவே ஆணைப் பிறப்பித்திருந்தாலும் மீண்டும் தொடர்ந்து அவ்வரசாணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(ii) சமூக நலத்துறைத் திட்டங்கள் மூலம் செயல்படுத்தும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதி உதவித்திட்டம்

மற்றும் பெண் குழந்தைகள் பாதுபாப்புத் திட்டம் உட்பட அனைத்து திருமண உதவித் திட்டங்களிலும், பயனாளிகளின் பெயரை கிராம ஊராட்சிகள் பரிந்துரை செய்யும். அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பயனாளிகள் அத்திட்டங்களுக்கான தகுதிகளை நிறைவு செய்துள்ளனரா என்பதை சமூக நலத்துறை அலுவலர்கள் சரிபார்த்துப் பின்னர் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் குறித்த பட்டியலை கிராமசபையின் தகவலுக்காக அனுப்பப்பட வேண்டும்;

(iii) ஊனமுற்றோர் நலத்துறையில் தனிநபர் பயன்பெறும் திட்டங்களில் கிராம ஊராட்சிகள் பரிந்துரை செய்யும் பயனாளிகளின் பட்டியலுக்கு கிராமசபையால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

(iv) ஊனமுற்றோருக்கு உதவித்தொகை/ ஒய்வூதியத் தொகை போன்றவை வழங்குவது முறையாக நடைபெறுகிறதா, காலதாமதமின்றி அளிக்கப்படுகிறதா என்பதை ஊராட்சிகள் கவனித்து, மேற்பார்வையிட்டு, அப்படி குறைபாடுகள் ஏதும் தென்பட்டால், ஊராட்சி மன்றத்தின் நலக் குழு (Welfare Committee) மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(v) சமூக நலத் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்களை ஏற்கனவே உள்ள கிராம ஊராட்சி மன்ற நலக் குழு மூலம் ‘கவனிக்கும்’ குழுவாக செயல்பட வேண்டும்.

**2.** மேலே பத்தி **1–**ல் வெளியிடப்பட்ட ஆணைகள் மீது தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்கும் படி துறைத் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

நா.ச. பழனியப்பன்,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.